# பாத்ததும்பர பிரதேச சபை
# கண்டி மாவட்டம்

## 1 நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 மார்ச் 31 ஆம் திகதியும், அதற்கு முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2010 பெப்ரவரி 26 ஆம் திகதியும் கணக்காய்வுக்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 1.2 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளின் மூலம் தெரிய வந்தவை மற்றும் எனக்கு வழங்கப்பட்ட சிறந்த தகவல்கள் மற்றும் விளக்கங்களுக்கமைய, பாத்ததும்பர பிரதேச சபை 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன், இவ்வறிக்கையில் 1.3 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்டிருந்த காரணிகளால் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்படும் தாக்கங்களை தவிர, 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பாத்ததும்பர பிரதேச சபையின் செயலாற்றுகை தொடர்பான நிலைவரத்தையும், அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு நடவடிக்கைகளின் நிதிசார் விளைவுகளை உண்மையாகவும், நியாயபூர்வமாகவும் வெளிப்படுத்தும் விதத்தில் நிதிக்கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டிருந்தன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1. கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2010 ஆம் ஆண்டின் இறுதியில் கிடைக்க வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 189,588 ஆக இருந்ததுடன், அது ரூபா 202,276 எனக் கணக்கீடு செய்யப்பட்டிருந்த காரணத்தினால், வருமானம் மற்றும் வருமான கடன்பட்டோர் ரூபா 12,688 இனால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2010 ஆம் ஆண்டினுள் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 12,270 பெறுமதியான காகிதாதிகள் மற்றும் காரியாலய உபகரணங்கள் என்பன நிலையான சொத்துக்கள் என மூலதனமாக்கப்பட்டிருந்தமையினால், நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதனத்திற்கு வருமானத்தினால் பங்களிப்புச் செய்யும் கணக்கு அப்பெறுமானத்தினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(இ) முன்னைய ஆண்டுகளில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 230,775 பெறுமதியான பொறிகள் மற்றும் இயந்திரங்கள் மூலதனமாக்கப்படாமல் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) 2010 திசம்பர் 31 ஆம் திகதியிலுள்ளவாறான கையிருப்பு ரூபா 42,054 ஐந்தொகையில் உத்தியோகத்தர்களிடம் இருக்கும் காசின் கீழ் காட்டப்படாது, மக்கள் வங்கி கணக்கு மீதியுடன் இணக்கம் செய்யப்பட்டிருந்தது.

(உ) நிலையான சொத்துக்கள் கணக்கின் மீதி மூலதனத்திற்கு வருமானத்தினால் பங்களிப்புச் செய்யும் கணக்கு மீதிக்குச் சமனாக வேண்டுமாயினும், அக்கணக்குகளுக்கு இடையே ரூபா 153,000 வித்தியாசம் காணப்பட்டது.

(ஊ) காணி உரிமை மாற்றத்திற்காக அறவிடப்பட வேண்டிய முத்திரைக் கட்டணத்திற்காக, பதவியணியிற்கான ஊக்குவிப்புக் கொடுப்பனவிற்காகச் செலுத்த வேண்டிய ரூபா 17,825 இற்காக கடன்கொடுத்தோரின் கீழ் நிதி ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டில் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்ட மற்றும் புதுப்பித்தல் மேற்கொள்ளப்பட்ட ரூபா 1,019,847 பெறுமதியான 05 கட்டடங்களின் பெறுமதி மூலதனமாக்கப்படவில்லை.

(ஏ) முன்னைய ஆண்டின் நவெம்பர் மற்றும் திசெம்பர் மாதங்களுக்கு உரிய ரூபா 37,308 பெறுமதியான எரிபொருள் பட்டியல் நடப்பு ஆண்டில் செலவின விடயத்திற்கு வரவு வைத்து, கொடுப்பனவு செய்த காரணத்தால் மீளாய்வாண்டின் செலவினம் அப்பெறுமானத்தினால் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது.

(ஐ) 2001 செப்தம்பர் 01 ஆம் திகதி முதல் 2009 ஆம் ஆண்டின் செப்தம்பர் வரையான காலப்பகுதிக்குரிய முன்பள்ளி பாடசாலை ஆசிரியர் ஒருவருக்காக

மீளாய்வாண்டில் செலுத்தப்பட்ட ரூபா 74,210 ஆன நிலுவை சம்பளத்திற்காக கடன்கொடுத்தோரின் கீழ் ஒதுக்கம் செய்யப்படவில்லை.

### 1.3.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டு கணக்குகள்

04 கணக்கு விடயங்களுக்குரிய கட்டுப்பாட்டுக் கணக்குகளின் பிரகாரம் மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 18,726,436 ஆக இருந்ததுடன், உப பட்டோலைகளின் பிரகாரம் அத்தகைய கணக்கு மீதிகளின் மொத்தம் ரூபா 19,693,875 ஆக இருந்தது.

### 1.3.3 செலுத்தப்பட வேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் ஓர் ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட செலுத்த வேண்டியிருந்த கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 387,424 ஆக இருந்தது.

### 1.3.4 கணக்காய்வுக்கான சான்றுகளின்மை

#### கணக்காய்வுக்கு தகவல்களைச் சமர்ப்பிக்காமை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 10,774,677 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்களை கணக்காய்வின் போது திருப்திகரமானதாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.5 இணக்கமின்மைகள்

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத் தீர்மானங்கள் என்பனவற்றிக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2006/10 ஆம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் 153 | வீதி விளக்கு உபகரணங்களை கொள்வனவு செய்வதற்கு உரிய ரூபா 4,784 பெறுமதியான நிறுத்தி வைத்தல் வரி அறவிடப்பட்டு உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 2009 செப்தெம்பர் 18 ஆம் திகதிய மற்றும் பீஎப்/437 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | சகல காப்புறுதி மேவுகையும் வரையறுக்கப்பட்ட இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அல்லது காப்புறுதி நம்பிக்கை நிதியத்தில் இருந்து மட்டும் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும் என ஆலோசனை வழங்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாலோசனை களுக்கு முரணாக ரூபா 19,460 செலவிடப்பட்டு வெளியார் நிறுவனமொன்றில் இருந்து காப்புறுதி மேவுகையொன்று பெற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. |

## 2 நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 10,656,591 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 774,315 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டும் முன்னைய ஆண்டின் பொருட்டும் மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | | 2010 | | | 2009 | | |
|---|---|---|---|---|---|---|---|
| வருமான விடயம் | | மதிப்பிடப் பட்ட | உள்ளவா றான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பி டப்பட்ட | உள்ள வாறான | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 3,100 | 3,078 | 1,433 | 2,700 | 2,410 | (290) |
| (ii) | வாடகை | 2,138 | 1,450 | 650 | 1,255 | 1,423 | 168 |
| (iii) | அனுமதிப்பத்திரம் | 1,587 | 1,483 | - | 1,232 | 1,549 | 317 |
| (iv) | ஏனையவை | 16,911 | 10,785 | 515 | 10,816 | 12,975 | 2,159 |

### 2.2.2 நீதிமன்ற தண்டப்பணம்

வெவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் 03 நீதிவான் நீதிமன்றங்களினால் 2010 திசம்பர் 31 வரை அறவிடப்பட்டு பிரதான செயலாளருக்கு அனுப்பப்பட்டுள்ள ரூபா 202,276 ஆன தண்டப்பணத் தொகை சபைக்கு கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.3 முத்திரைக் கட்டணம்

2010 திசம்பர் 31 வரை முத்திரைக் கட்டணங்களாக பதிவாளர் நாயகத்திடமிருந்து ரூபா 9,051,830 ஆன தொகை கிடைக்க வேண்டியுள்ளது.

### 2.2.4 நிலுவை வீதவரி

மீளாய்வாண்டின் இறுதியில் காணப்பட்ட ரூபா 1,516,374 நிலுவை வீதவரியை 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 158(1)(அ) ஆம் ஏற்பாட்டின் பிரகாரம், அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.5 நிலுவை கடை வாடகை

ஒப்பந்தப் பிரகாரம், வாடகை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாமையினால், 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 18 குத்தகைக்காரர்களிடம் இருந்து ரூபா 501,584 ஆன தொகை கடைக் கூலியாக அறவிடப்பட வேண்டியிருந்தது.

### 2.3 செலவினக் கட்டமைப்பு

மீளாய்வாண்டிற்கும் முன்னைய ஆண்டிற்குமான சபையின் பாதீடு செய்யப்பட்டதும் உள்ளவாறான செலவினமும் உரிய முரண்களுடன் கீழே காட்டப்பட்டுள்ளது.

| செலவின விடயம் | 2010 பாதீடு செய்யப்பட்டது | 2010 உள்ளவாறான | 2010 முரண் | 2009 பாதீடு செய்யப்பட்டது | 2009 உள்ளவாறான | 2009 முரண் |
|---|---|---|---|---|---|---|
| | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 | ரூபா '000 |
| மீண்டுவரும் செலவினம் | | | | | | |
| ஆளணி வேதனம் | 21,298 | 16,743 | 4,555 | 19,257 | 17,762 | 1,495 |
| ஏனையவை | 13,163 | 8,488 | 4,675 | 12,657 | 6,730 | 5,927 |
| உப மொத்தம் | 34,461 | 25,231 | 9,230 | 31,914 | 24,492 | 7,422 |
| மூலதனச் செலவினம் | 20,400 | 25,911 | (5,511) | 11,810 | 30,906 | (19,096) |
| மொத்தம் | 54,861 | 51,142 | 3,719 | 43,724 | 55,398 | (11,674) |

### 2.4 நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தாமை

2010 வருடாந்த பாதீட்டின் மூலம் 05 செலவின விடயங்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த ரூபா 912,500 ஆன நிதிஏற்பாட்னை உரிய செயற்பாடுகளுக்கு பயன்படுத்தாமல் முழுமையாக சேமிக்கப்பட்டிருந்தது.

## 2.5 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட மற்றும் உள்ளவாறான பதவி அணி

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான சபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவி அணி மற்றும் உள்ளவாறான பதவி அணி தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| பதவியினர் வகை | அங்கீகரிக்கப்பட்ட | உள்ளவாறான |
|---|---|---|
| நிறைவேற்றுத் தரங்கள் | 02 | 02 |
| இரண்டாம் நிலை | 27 | 24 |
| ஆரம்ப | 27 | 24 |
| வேறு (அமைய / தற்காலிக) | -- | 11 |

## 2.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

### 2.6.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்ட பௌதீக வளங்கள்

02 ஆண்டுகளுக்கு மேற்பட்ட ரூபா 96,490 பெறுமதியான 04 சொத்து விடயங்கள் பயன்படுத்தப்படாமலும் குறைப் பயன்பாட்டிற்குட்பட்டும் இருந்தமை தெரிவுக் கணக்காய்வு பரிசோதனை போது வெளிப்படுத்தப்பட்டிருந்தன.

### 2.6.2 பெறவேண்டிய கணக்குகள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பெறவேண்டிய கணக்கு மீதிகளின் பெறுமதி ரூபா 29,253,019 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட கணக்குகளின் கூட்டுத்தொகை ரூபா 163,155 ஆக இருந்தது.

### 2.6.3 அறவிடப்படவேண்டிய ஊழியர் கடன்கள்

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் முற்பண மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 4,243,429 ஆக இருந்ததுடன், 01 ஆண்டிற்கு மேற்பட்ட காலமாகக் காணப்பட்ட அறவீடுகள் நிலுவையாக இருந்த கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 39,557 ஆக இருந்தது.

## 2.7 செயற்பாட்டு வினைத்திறனின்மை

(அ) ஆயுர்வேத மருத்துவ உத்தியோகத்தருக்காக 2007 ஆம் ஆண்டிற்காக செலுத்தப்பட்ட ரூபா 13,200 ஆன நிலுவைச் சம்பளத்தை உள்ளூராட்சி மன்ற திணைக்களத்திடமிருந்து மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(ஆ) அதிகாரப் பிரதேசத்தினுள் வீதி விளக்குகளை பராமரிப்பதற்காக செலவிடப்பட்ட ரூபா 39,000 தொகையை மீள்நிரப்பப்பட்டிருக்கவில்லை.

(இ) 2002 ஆம் ஆண்டில் தொலைபேசியொன்றைப் பெற்றுக்கொள்வதற்காக முகவர் தபால் நிலையமொன்றில் வைப்புச் செய்யப்பட்டிருந்த ரூபா 25,000 தொகையினை மீளப்பெற்றுக்கொள்ள முடியாதிருந்தது.

## 2.8 உள்ளகக் கணக்காய்வு

நிறுவனத்தில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

## 3 முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) சொத்துக் கட்டுப்பாடு

(ஈ) கடன்பட்டோர் மற்றும் கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு

மாவட்டம் :- கண்டி

உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் :- பாத்ததும்பறை பிரதேச சபை

| வருமான விடயங்கள் | 2010 | | | ஆண்டிற்கான உள்ளபடியான வருமானம் | | | 2010 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2010ஜன. 01 இல் ஆரம்ப நிலுவை | வருடத்திற் குரிய வருமானம் பட்டியலிடப் பட்டது மதிப்பிடப்ப ட்டது | கிடைக்க வேண்டிய தொகை | முன்னைய ஆண்டுகளு க்குரியவை | 2010 ஆம் ஆண்டுக்குரி யவை | மொத்த பெறுவனவு கள் | முன்னைய ஆண்டுகள் தொடர்பானது | | 2010ஆம் ஆண்டுக்கு ரியவை | மொத்த நிலுவை |
| | | | | | | | 5 ஆண்டுகள் அல்லது அதற்கு கீழ் | 5 ஆண்டி ற்கு மேல் | | |
| உள்வாரி | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 408,547 | 777,359 | 1,185,906 | 140,520 | 522,428 | 662,948 | 268,027 | - | 254,931 | 522,958 |
| குத்தகைக் கூலி | 436,649 | 1,269,217 | 1,705,866 | 106,586 | 1,088,744 | 1,195,330 | 330,063 | - | 180,473 | 510,536 |
| அனுமதிப்பத்திரம் | -- | 725,000 | 725,000 | | 951,230 | 951,230 | | - | (226,230) | (226,230) |
| சேவைகளுக்குரிய கட்டணம் | 267,925 | 510,094 | 778,019 | 51,162 | 426,323 | 477,485 | 216,763 | - | 83,771 | 300,534 |
| பிடியானைக்கட்டணமும் தண்டப் பணமும் | | | | | | | | | | |
| வேறு | 45,087 | 55,853 | 100,940 | 9,009 | 25,189 | 34,198 | 36,078 | - | 30,664 | 66,742 |
| உப மொத்தம் | 1,158,208 | 3,337,523 | 4,495,731 | 307,277 | 3,013,914 | 3,321,191 | 950,931 | - | 323,609 | 1,174,540 |
| வெளிவாரி | | | | | | | | | | |
| அரச நன்கொடை | 4,248,435 | 9,890,000 | 14,138,435 | | | 5,990,381 | -- | - | | 8,148,054 |
| மாகாண சபை கொடை | 913,531 | -- | 913,531 | | | | | - | - | 913,531 |
| வேறு | | | | | | | | | | |
| உப மொத்தம் | 5,161,966 | 9,890,000 | 15,051,966 | -- | -- | 5,990,381 | -- | - | - | 9,061,585 |

மாவட்டம் :- கண்டி

உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் :- பாத்ததும்பறை பிரதேச சபை

| வருமான விடயங்கள் | 2005 | | | ஆண்டில் உள்ளபடியான வருமானம் | | | 2005 திசம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | 2005 ஜனவரி 01 இல் உள்ள வாறு ஆரம்ப நிலுவை | வருடத்திற் குரிய வருமானம் பட்டியலிடப் பட்டது மதிப்பீடு | பெற வேண்டிய தொகை | முன்னைய ஆண்டுகளு க்குரியவை | 2005 ஆம் ஆண்டுக்குரி யவை | மொத்த பெறுவனவுக ள் | முன்னைய ஆண்டுகள் தொடர்பானது - 5 ஆண்டுகள் அல்லது அதற்கு கீழ் | முன்னைய ஆண்டுகள் தொடர்பானது - 5 ஆண்டி ற்கு மேல் | 2005 ஆம் ஆண்டுக் குரிய வை | மொத்த நிலுவை |
| உள்வாரி | | | | | | | | | | |
| வீதவரி மற்றும் வரி | 627,284 | 949,080 | 1,576,364 | 419,176 | 686,696 | 1,105,872 | 173,891 | - | 234,656 | 408,547 |
| குத்தகை கூலி | 481,120 | 1,214,000 | 1,695,120 | 131,917 | 1,455,341 | 1,587,258 | 159,849 | 189,353 | 85,947 | 435,149 |
| அனுமதிப்பத்திரம் | 24,200 | 766,050 | 790,250 | 24,200 | 1,200,905 | 1,225,105 | - | - | - | - |
| சேவைகளுக்குரிய கட்டணம் | - | 704,400 | 704,400 | -- | 1,079,724 | 1,079,724 | - | - | - | - |
| பிடியானைக்கட்டணமும் தண்டப் பணமும் | 78,999 | 820,500 | 899,499 | 39,971 | 611,848 | 651,219 | 187,717 | 26,150 | 6,060 | 50,927 |
| வேறு | 9,131,343 | 9,213,300 | 18,344,643 | 6,050,965 | 4,166,778 | 10,217,742 | 3,074,589 | - | 4,977,877 | 8,052,466 |
| உப மொத்தம் | 10,342,946 | 13,667,330 | 24,010,276 | 6,666,230 | 9,200,690 | 15,866,920 | 3,427,047 | 215,503 | 5,304,539 | 8,947,090 |
| வெளிவாரி | | | | | | | | | | |
| அரச நன்கொடை | 2,193,499 | - | - | 3,103,862 | 1,765,609 | 4,869,470 | 123,003 | - | 4,125,432 | 4,248,435 |
| மாகாண சபை நன்கொடை | 610,830 | - | - | 610,830 | 413,357 | 1,024,187 | - | - | 913,531 | 913,531 |
| வேறு | - | - | - | - | 551,570 | 551,570 | - | - | - | |
| உப மொத்தம் | 2,804,329 | - | - | 3,714,692 | 2,730,536 | 1,698,761 | 123,003 | - | 5,038,963 | 5,161,966 |